**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**எம்.சி.ஓ.பி. 7/2024**

**நாள்.03.03.2026**

ம.சா.1 ஹரிணி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

<u>முதன்மை விசாரணை தொடர்ச்சி:</u>

நான் இம்மனுவில் மனுதாரர். எனது முதன்மை விசாரணை தொடர்ச்சி சாட்சியத்தை கூடுதல் நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>ஆவணங்கள்</u>

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1) | 22.09.2023 | ம.சா.ஆ.10 | விபத்துப்பதிவேடு | சான்றிட்ட நகல் |
| 2) | 24.09.2023 | ம.சா.ஆ.11 | சட்ட மாறுதல் அறிக்கை | சான்றிட்ட நகல் |
| 3) | 11.10.2023 | ம.சா.ஆ.12 | TN 65 AD 7139 என்ற வாகனத்தின் வாகன ஆய்வாளர் அறிக்கை | சான்றிட்ட நகல் |
| 4) | 17.11.2023 | ம.சா.ஆ.13 | TN 65 AY 6043 என்ற வாகனத்தின் வாகன ஆய்வாளர் அறிக்கை | சான்றிட்ட நகல் |
| 5) | 22.09.2023 | ம.சா.ஆ.14 | மாதிரி வரைபடம் | சான்றிட்ட நகல் |
| 6) | 22.09.2023 | ம.சா.ஆ.15 | பார்வை மகஜர் | சான்றிட்ட நகல் |
| 7) | 17.11.2023 | ம.சா.ஆ.16 | இறுதி அறிக்கை | சான்றிட்ட |



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.03 17:28:12 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நகல் |
| 8) | 12.12.2025 | ம.சா.ஆ.17 | RCS No. 240/2024 வழக்கில் ஏற்பட்ட உத்தரவு | சான்றிட்ட நகல் |

3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

இந்த விபத்து சம்மந்தமாக என் கணவர் பெயரில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை என் கணவர் பெயரில் உள்ளதை எதிர்த்து, நான் நீதிமன்றத்திலோ, காவல் உயர் அதிகாரிகளிடமோ மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் கணவர் விபத்து சமயத்தில் அதே வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்ததால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும், அதனால்தான் நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் முறையான காப்பீடும், முறையான ஓட்டுநர் உரிமமும் எனது கணவருக்கு கிடையாது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 3ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கான காப்பீடு ஊர்ஜிதத்தில்தான் இருந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் முறையான ஆவணங்களோ, முறையான ஓட்டுநர் உரிமமும், முறையாக காப்பீடோ இல்லாத காரணத்தினாலோ, என் கணவர்தான் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. என் கணவர் ஓட்டிச்சென்ற வாகனம் எனது வாகனம் என்றால் சரியல்ல. அந்த வாகனத்திற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவரின் அண்ணனுடைய வாகனம் ஆகும். என் கணவர் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்பட்டது என்பதால், நான் இழப்பீடு பெற வேண்டும்தான் வாகனத்தின் உரிமையாளராக என் கணவரின் அண்ணனிடம் இருந்துதான் பெற முடியும் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால்

சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு ஊர்ஜிதத்தில் இருப்பதால், 4ம் எதிர்மனுதாரர்தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளனர் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 3ம் எதிர்மனுதாரர் மீது எந்த தவறும் இல்லாத காரணத்தினால், 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் எந்தவித இழப்பீடும் கொடுக்க கடமைப்படவில்லை என்றால் சரியல்ல.

**<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த மனுவில் 5, 6 எதிர்மனுதாரர்கள் என் கணவரின் சகோதரர்கள் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நானும் என் கணவரும் தனிக்குடித்தனம் இருந்தோம் என்றால் சரிதான். என் கணவரின் வருமானத்தை நம்பி 5, 6 எதிர்மனுதாரர்கள் இருக்கவில்லை என்றால் சரிதான். 5, 6 எதிர்மனுதாரர்கள் என் கணவரை சார்ந்து இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு எதிர்மனுதாரர் நிறுவனம் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்படவில்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு மாத சம்பளம் எவ்வாறு கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் Account–ல் ஏற்றுவார்கள். என் கணவர் வருமான வரி செலுத்துவாரா என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும்.

ம.சா.7 படிவம் 16–ன் உண்மைத்தன்மை அதை வழங்கியவரை விசாரித்தால்தான் தெரியவரும் என்றால் சரிதான். ம.சா.ஆ.7ன்படி என் கணவரின் ஆண்டுவருமானம் பிடித்தம் போக ரூ.5,45,040/– என்றால் சரிதான். நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீட்டுத்தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.03 17:28:19 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .